## ஆரோவில்வாசிகள் அவை முடிவெடுத்தல் (RAD)

## தற்காலிக திருத்தப்பட்ட கொள்கை

### பரிந்துரை

ஆரோவில்லின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் அபிலாஷைகளை மிக நெருக்கமாகப் பிரதிபலிக்கும் ஒரு புதிய செயல்முறையானது, விரிவான மற்றும் கூட்டாக அங்கீகரிக்கப்படும் வரை மட்டுமே கீழே உள்ள முடிவெடுக்கும் முறை நடைமுறையில் இருக்கும்.

### அறிமுகம்

ஆரோவில்லில் உள்ள ஆரோவில்வாசிகள் அவை (RA) முடிவெடுப்பது, முடிவெடுப்பதில் பங்கேற்க தகுதியுடைய ஒவ்வொரு நபருக்கும் உரிமையும் தனிச்சுதந்திரமும் உள்ளது என்ற புரிதலின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால் இந்த உரிமையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏதும் இல்லை.

ஒரு நபர் முடிவெடுப்பதில் பங்கேற்கிறாரா இல்லையா என்பது தனிப்பட்ட விஷயம். பங்கேற்பதற்காக மக்கள் மதிக்கப்பட வேண்டும், அதேபோல் பங்கேற்பதில்லை என்ற அவர்களின் முடிவும் மதிக்கப்படவேண்டும்.

ஒரு நபர் பங்கேற்க விரும்பாததற்கு பல காரணங்கள் இருக்கலாம்: உதாரணமாக, தலைப்பு அவருக்கு ஆர்வமாக இல்லை; ஒருவருக்கு வேறு இடத்தில் அழுத்தமான வேலை உள்ளது; அல்லது முடிவை மற்றவர்களிடம் விட்டுவிடுவதில் ஒருவர் திருப்தி அடைகிறார்.

### முடிவெடுப்பதில் யார் பங்கேற்கலாம்?

உறுதிப்படுத்தப்பட்ட ஆரோவில்வாசிகள் மட்டுமே முடிவெடுப்பதில் பங்கேற்க முடியும்.

நுழைவு வாரியத்தால் உறுதிசெய்யப்பட்ட ஆரோவில்வாசிகள் என அறிவிக்கப்பட்டவர்கள், ஆரோவில் பவுண்டேஷன் செயலரின் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் குடியிருப்பாளர்களின் பதிவேட்டில் (Register of Residents) பதிவு செய்யப்பட்டவர்கள் அனைத்து சமூக முடிவெடுக்கும் செயல்முறைகளிலும் பங்கேற்க தகுதியுடையவர்கள். இதில் 18 வயதுக்குட்பட்டவர்கள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்), பிற ஆரோவில் அந்தஸ்து பெற்றுள்ளவர்கள் ஆகிய எவரும் பங்கேற்க முடியாது.

பிற ஆரோவில் அந்தஸ்து பெற்றவர்கள் (ஆரோவில் இளைஞர்கள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்), தன்னார்வலர்கள்) கூட்ட அறையில் அமைதியான பார்வையாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆனால் உண்மையான முடிவெடுக்கும் செயல்முறையில் பங்கேற்க முடியாது.

### ஒருமித்த கருத்துடன் முடிவெடுத்தல் எதிர் (versus) வாக்களிப்பதன் மூலம் முடிவெடுத்தல்

ஆரோவில்லில் வாக்களிப்பதன் மூலம் முடிவெடுப்பதற்குப் பதிலாக ஒருமித்த கருத்து மூலம் முடிவெடுப்பது விரும்பப்படுகிறது. இது நமது ஆன்மீக ஆர்வமுடைமையின் அடிப்படையிலும், அனைவரையும் திருப்திப்படுத்தக்கூடிய ஒரு தீர்வைக் கண்டறியும் முயற்சியின் அடிப்படையிலும் அமைந்துள்ளது. இந்த முயற்சி சில சமயங்களில் தீர்வுகாணும் வழியைத் தடுத்துள்ள போதிலும், ஒருமித்த கருத்தை உருவாக்குவதன் மூலம் எவ்வாறு முடிவுகளை எடுப்பது என்பதைத் தொடர்ந்து ஆராய்வதே எங்கள் நோக்கமாகும்.

ஒருமித்த கருத்தைக் கண்டறிய முடியாவிட்டால், வாக்களிப்பதை உள்ளடக்கிய பிற தீர்வுகளைப் பயன்படுத்த வேண்டும்.

### ஆரோவில்வாசிகள் அவை முடிவெடுக்கும் செயல்முறை

1. ஆரோவில்வாசிகள் அவை முடிவெடுக்கும் செயல்முறை (RAD) ஆரோவில்வாசிகள் அவைச் சேவையால் (RAS) ஏற்பாடு செய்யப்படுகிறது.

அ) செயற்குழு, ஆரோவில் அவை, ஆரோவில் நகர வளர்ச்சி அவை, நுழைவு வாரியம், நிதி மற்றும் சொத்துக்கள் மேலாண்மைக் குழு ஆகியவற்றின் வேண்டுகோளின்படி; அல்லது

ஆ) குறைந்தது 60 குடியிருப்பாளர்களின் வேண்டுகோளின் பேரில்.

*ஆர்ஏஎஸ்-ஆல் ஒரே தலைப்பு/பரிந்துரை குறித்து ஒரே நேரத்தில் ஆரோவில்வாசிகள் அவை முடிவெடுக்கும் செயல்முறை (RAD) செய்யப்படாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரே தலைப்பில் மேலே உள்ள எந்தவொரு அமைப்பும் ஒன்றுடன் ஒன்று கூடிய ஆரோவில்வாசிகள் அவை முடிவெடுக்கும் செயல்முறைக்கு (RAD) கோரக்கூடாது. ஒரு தலைப்பு/பிரச்சினைக்கான மாற்று பரிந்துரைகள் இருந்தால், ஆர்ஏஎஸ்-க்கு முதலாவது ஆரோவில்வாசிகள் அவை கூட்டத்திற்கு (RAM)* முன்போ அல்லது அக்கூட்டத்தின் போதோ தெரிவிக்கப்பட வேண்டும், மேலும் அந்த கூட்டத்திலோ அல்லது அதற்குப் பின் நடைபெறும் கூட்டங்களிலோ வெவ்வேறு விருப்பங்கள்/சாத்தியங்களுக்கு சமமான இடம் கொடுக்கப்படும்; முடிவெடுப்பதற்கான இறுதி அழைப்பில் விருப்பத்தேர்வுகள் ஒருங்கிணைக்கப்படும்.*

2. ஆரோவில்வாசிகள் அவைச் சேவை (ஆர்ஏஎஸ்) (RAS) தலைப்பை அறிமுகப்படுத்த முதல் கூட்டத்தை ஏற்பாடு செய்கிறது, அதைத் தொடர்ந்து ஒரு முடிவை முன்வைக்க மற்றும் விவாதிக்க குறைந்தபட்சம் ஒன்று, மற்றும் அதற்கு மேற்பட்ட கூடுதல் ஆரோவில்வாசிகள் அவைக் கூட்டங்களை (RAM) அது ஏற்பாடு செய்யும். இதில் வெவ்வேறு கண்ணோட்டங்கள் மற்றும் விருப்பங்கள்/விருப்பத்தேர்வுகள் இருக்கும்.

அ) தங்கள் பரிந்துரையில் முடிவெடுக்கும் செயல்முறையைத் தொடங்கக் கோரியுள்ள, மேற்கூறிய அமைப்புகள் ஒன்றுடன் (அல்லது அவர்களின் பிரதிநிதிகளுடன்) ஆர்ஏஎஸ் நெருக்கமாகப் பணிபுரியும், வழிநடத்துபவர்கள் மற்றும் தொடர்புடைய நிபுணர்கள், அறிவிப்புகள், அதற்கான உரை உட்பட முடிவெடுக்கும் செயல்முறையின் கட்டமைப்பை வடிவமைக்கப்படும்;

ஆ) ஆரோவில்வாசிகள் அவைக் கூட்டங்கள் (RAM) முடிந்தவரை, நேரடியாகப் பங்கேற்றல் மற்றும் மெய்நிகர் பங்கேற்பு ஆகிய இரண்டு முறைகளையும் பயன்படுத்தி நடத்தப்படும்;

இ) கூட்டத்தின் தேதிக்கு குறைந்தது 1 வாரத்திற்கு முன்னதாக ஆர்ஏஎஸ் அஞ்சல் அமைப்பு (மெயிலிங் சிஸ்டம்) மூலம் வரவிருக்கும் ஆர்ஏஎம்-இல் பங்கேற்க சமூகத்திற்கு ஒரு அழைப்பை (பரிந்துரை, சாத்தியமான முடிவுகளை எதிர்பார்க்கக் கூடிய நிகழ்ச்சி நிரல் மற்றும் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன்) ஆர்ஏஎஸ் அனுப்பும். அதே அறிவிப்பு நியூஸ் அண்ட் நோட்ஸ் மற்றும் ஆரோநெட் ஆகியவற்றில் வெளியிடப்படும்;

ஈ) ஒவ்வொரு முதல் ஆர்ஏஎம் (RAM) முடிவிலும் (தொடர் கூட்டங்கள்) ஆர்ஏஎம் (RAM) பங்கேற்பாளர்கள் பரிந்துரைகள் பற்றியும் அடுத்த ஆர்ஏஎம்க்கு முன்னதாக எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் என்ன நினைக்கிறார்கள்/ கருதுகிறார்கள் என்பதைப் பற்றி ஆர்ஏஎஸ் ஆனது ஆர்ஏஎம் பங்கேற்பாளர்களிடமிருந்து கருத்தை அறியும். இது வழிநடத்துநர்கள் மற்றும்/அல்லது வள நபர்களின் உதவியுடன் செய்யப்படலாம்;

உ) ஆர்ஏஎஸ் பின்னர் ஆர்ஏஎம்-இன் அறிக்கையை பரிந்துரைகளுடன் வெளியிடும். அவற்றைக் குறித்து ஆரோவில் சமூகத்தவரின் கருத்துகள் கேட்கப்படும். பெறப்பட்ட கருத்துக்களை ஆர்ஏஎஸ் சேகரித்து தொகுத்து, ஆர்ஏடி-ஐ ஆரம்பித்து பரிந்துரைகளை செய்தவர்களிடம் ஒப்படைக்கும். பின்னூட்டங்களை ஒருங்கிணைத்து, திருத்தப்பட்ட பரிந்துரையை அடுத்துவரும் ஆர்ஏஎம்-இல் முன்வைப்பது ஆர்ஏடி-ஐத் தொடங்கியவர்களின் பொறுப்பாகும், இதில் என்ன பின்னூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது, எது இல்லை, ஏன் என்பதற்கான விளக்கமும் அடங்கும்;

ஊ) அடுத்து வரும் ஒவ்வொரு ஆர்ஏஎம் முடிவிலும், ஆர்ஏஎஸ்/வழிநடத்துநர், கூட்டத்தின் பங்கேற்பாளர்களுடன், மெய்நிகர் பங்கேற்பாளர்கள் உட்பட, வாக்களிக்கும் விருப்பங்கள் மற்றும் இறுதி முடிவுக்காக சமூகத்திற்கு ஒரு செம்மைப்படுத்தப்பட்ட பரிந்துரையைக் கொண்டு வருதல் குறித்து கைகளை உயர்த்திக் காட்டுவதன் மூலமாகவோ அல்லது பிற வழிமுறைகள் மூலமாகவோ, பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதற்கு பொதுவான உடன்பாடு உள்ளதா என்று சரிபார்க்கப்படும்;

எ) ஆர்ஏடிக்கான பரிந்துரை செம்மைப்படுத்தப்படும் வரை மற்றும் ஆர்ஏடி-இல் முடிவெடுக்கப்படும் வரை ஆர்ஏஎஸ் தேவையான பல ஆர்ஏடி-களை ஏற்பாடு செய்யும். ஆர்ஏடி செயல்முறையானது ஒரு நியாயமான காலக்கெடு வரம்பிற்குள் உள்ளது என்பதை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். *ஆரோவில்வாசிகள் அவைக் கூட்டங்களை அழைக்கவும் ஏற்பாடு செய்யவும் ஆர்ஏஎஸ்-இன் ஒட்டுமொத்த உதவி தேவை என்பதை நினைவில் கொள்ளவும்.*

*(ஆர்ஏஎம்கள்), எந்த முடிவெடுக்கும் செயல்முறையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அதே நேரத்தில், எந்தவொரு பணிக்குழு அல்லது குடியிருப்பாளர்களின் குழுவும் வழக்கமான பொதுக்கூட்டங்களை (GMs) அழைக்கலாம் மற்றும் ஏற்பாடு செய்யலாம், ஆரோவில்வாசிகள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், இந்தக் கருத்துக்களை முழுமையாகவும், மரியாதையாகவும், நியாயமாகவும் கேட்கலாம். ஆர்ஏஎஸ் இருக்கும் தன்மையைப் பொறுத்து, பொதுக்கூட்டங்களுக்கான (GM) நிபுணத்துவம், தொழில்நுட்பம் மற்றும் தளவாட ஆதரவை வழங்க இக்குழுவிடம் கேட்கலாம், இருப்பினும் இந்த பொதுக்கூட்டங்கள் ஆர்ஏடி (RAD) செயல்முறையின் பகுதியாக இருக்காது.*

3) ஆர்ஏஎஸ் ஆனது வாக்களிக்கும் காலக்கெடுவிற்கு 2 வாரங்களுக்கு முன்னதாக ஆர்ஏஎஸ் அஞ்சல் அமைப்பு (மெயில் சிஸ்டம்) மூலம் தனிப்பயனாக்கப்பட்ட வாக்களிக்கும் இணைப்பைக் கொண்ட ஆர்ஏடி அறிவிப்பை (பரிந்துரை, வாக்களிப்பு விருப்பங்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன்) அனுப்பும். அதே அறிவிப்பு நியூஸ் அண்ட் நோட்ஸ் மற்றும் ஆரோநெட் ஆகியவற்றில் வெளியிடப்படும்.

**செயற்குழுவின் மதிப்பீட்டின்படி, அவசரநிலைகளில் மட்டுமே, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முந்தைய கூட்டங்களில் விவாதிக்கப்படாமல், குறுகிய காலத்திற்குள் அவசரகால ஆரோவில்வாசிகள் அவை முடிவெடுக்க ஆர்ஏஎஸ் அழைப்பு விடுக்கும்.**

4) 2 வார ஆர்ஏடி செயல்பாட்டின்போது குடியிருப்பாளர்கள் இதில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம்:

- ஆர்ஏஎஸ் அனுப்பிய தனிப்பயனாக்கப்பட்ட வாக்களிக்கும் இணைப்பைப் பயன்படுத்தி ஆன்லைன் வாக்களித்தல்; அல்லது

- நேரில் சென்று வாக்களித்தல்: காகித வாக்குச்சீட்டுகள் டவுன் ஹாலில் கிடைக்கும் (ஆர்ஏஎஸ் உறுப்பினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்). ஆர்ஏஎஸ்-ஆல் அறிவிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பொது இடத்திற்கு சென்று ஆர்ஏடி-இன் கடைசி நாளில் குடியிருப்பாளர்கள் தங்கள் முடிவுகளை காகிதத்தில் பதிவு செய்யலாம்.

*அநாமதேய வாக்குகள் செல்லாதவை என்பதை நினைவில் கொள்ளவும்.*

5) வாக்குப்பதிவு முடிந்ததும், ஆர்ஏஎஸ் ஆனது பெறப்பட்ட எல்லா தரவையும் (ஆன்லைன் மற்றும் நேரில்) சேகரித்து, பரிசீலித்து, தொகுக்கும், வாக்குகளை சரிபார்க்கும் (ஆர்ஏடி நிகழ்வில் பங்கேற்ற அனைவரின் தகுதியையும் சரிபார்த்தல் போன்றவை).

6) ஆர்ஏடி வாக்களிப்பு முடிந்த 48 மணிநேரத்திற்குள் ஒரு பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்ற ஆர்ஏடி-இன் முடிவை ஆர்ஏ-க்கு (ஆர்ஏஎஸ் மாஸ்புல்லட்டின், நியூஸ் அண்ட் நோட்ஸ் மற்றும் ஆரோநெட் மூலம்) அறிவிக்கும்.

ஒரு பரிந்துரை ஆரோவில்வாசிகள் அவையால் (ஆர்ஏ) ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது இவ்வாறு தீர்மானிக்கப்படும்:

- ஆன்லைனிலும் நேரிலும் செலுத்தப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை, ஆர்ஏடி-இன் போது ரெசிடென்ஸ் சர்வீஸ் தரவுத்தளத்தில் (மாஸ்டர் லிஸ்ட்) பதிவுசெய்யப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட ஆரோவில்வாசிகளின் எண்ணிக்கையில் குறைந்தது 10% ஆகும்; மற்றும்

- குறைந்தபட்சம் 50% செல்லுபடியாகும் வாக்குகள் பரிந்துரைக்கு ஆதரவாக உள்ளன; அல்லது

- இரண்டுக்கும் மேற்பட்ட வாக்களிப்பு விருப்பங்கள் உள்ள சந்தர்ப்பங்களில் வாக்களிக்கும் விருப்பங்களில் ஒன்றிற்கு ஆதரவாக அளிக்கப்பட்ட அதிக வாக்குகள்.

*குறிப்பு: தெளிவான பெரும்பான்மையைப் பெறுவதற்கு, வாக்களிக்கும் விருப்பங்கள் இரண்டாக மட்டுமே இருக்க வேண்டும்.*

7) ஆர்ஏடி-இன் முடிவை ஒட்டுமொத்த ஆர்ஏ-விற்கு அறிவித்த பிறகு, ஆர்ஏடியின் முடிவை செயற்குழு பதிவு செய்வதற்காக அதனிடம் தெரிவிக்கும் பொறுப்பு ஆர்ஏஎஸ் உடையதாகும்.

8) இந்த ஆர்ஏடி செயல்முறையின் மூலம் எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்துவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட பணிக்குழு/கள் அல்லது குடியிருப்பாளர்களிடம் உள்ளது.

* - ஆரோவில்வாசிகள் அவைக் கூட்டங்கள் (RAM) என்பது ஆர்ஏடி செயல்முறையின் ஒரு பகுதியாக இருக்கும் கூட்டங்கள் ஆகும்.

- பொதுக்கூட்டங்கள் (GM) என்பது ஆர்ஏடி (RAD) செயல்முறைக்கு வழிவகுக்காமல், எந்தவொரு தலைப்பிலும் தகவல் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக எந்த குடிமகனும் எந்த நேரத்திலும் அழைக்கக்கூடிய கூட்டங்கள் ஆகும்.

*இது 2021 அக்டோபரில் ஆரோவில்வாசிகள் அவையால் (ஆர்ஏ) அங்கீகரிக்கப்பட்டது.*

## **ஆர்ஏ முடிவெடுக்கும் செயல்முறையின் முடிவு** (Outcome of the RA Decision-Making Process)

அன்பார்ந்த குடியிருப்பாளர்களே,
பின்வரும் பரிந்துரையில் ஆர்ஏடி (வாக்களிப்பு) முடிவுகள் வருமாறு:

*“பணிஆணையில் கூறப்பட்டுள்ளபடி அவர்கள் 'ஆரோவில்வாசிகள் அவைக்கு 'ஆதரவு அளித்தல்' மற்றும் ‘பிரதிநிதித்துவம்' செய்யத் தவறியதால், "தற்போதைய ஆர்ஏ முடிவெடுக்கும் செயல்முறையின் மூலம் செயற்குழுவின் தனிப்பட்ட உறுப்பினர்களை பதவியில் இருந்து நீக்க நான் ஒப்புக்கொள்கிறேன். 50% க்கும் அதிகமான வாக்காளர்கள் ஒரு உறுப்பினர் நீக்கப்பட வேண்டும் என ஒப்புதல் அளித்தால், அந்த உறுப்பினரின் பதவிக்காலம் உடனடியாக முடிவுக்கு வரும்.*
*செயற்குழுவில் எஞ்சியிருக்கும் உறுப்பினர்கள் அப்பதவியில் தொடர்வார்கள் மற்றும் இடைக்கால உறுப்பினர்களை நியமிக்கலாம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவர்கள் ஆரோவில் அவையுடன் கலந்தாலோசித்து மட்டுமே இதை செய்ய முடியும்.*
*இந்த இடைக்கால உறுப்பினர்களை முந்தைய செயற்குழு உறுப்பினர்களிலிருந்து மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும். இடைக்கால செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் அடுத்த அங்கீகரிக்கப்பட்ட ஆர்ஏ தேர்வு செயல்முறை நடைபெற்று, புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை இருக்கும்.*
*அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டால், அதிக வாக்குகளைப் பெற்றுள்ள மூன்று செயற்குழு உறுப்பினர்கள், அடுத்த அங்கீகரிக்கப்பட்ட ஆர்ஏ தேர்வு செயல்முறை நடைபெறும் வரை இடைக்கால உறுப்பினர்களாக இருப்பார்கள்".*

**மொத்தம் 864 செல்லுபடியாகும் வாக்குகள் ஆன்லைனிலும் நேரிலும் சமர்ப்பிக்கப்பட்டன. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை முடிவைச் சரிபார்க்கத் தேவையான குறைந்தபட்ச எண்ணிக்கையான (கோரத்திற்கு) 10 சதவீத மேல் வாக்குகள் பதிவானது (239 வாக்குகள்)*.**

** - ரெசிடென்ஸ் சர்வீஸில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், ஆர்ஏடி-வில் பங்கேற்கத் தகுதியுள்ள நமது சமூகத்தின் மொத்த வயது வந்தோர் எண்ணிக்கை (வயது - 18 வயதுக்கு மேல், உறுதிப்படுத்தப்பட்ட ஆரோவில்வாசிகள்) 2389 (2022 மே மாத நிலவரப்படி).*

**மேலும் விவரங்கள் /More details >>>**
ஆர்எடி கொள்கையின்படி (**the RAD policy**) "*உறுதிப்படுத்தப்பட்ட ஆரோவில்வாசிகள் மட்டுமே முடிவெடுப்பதில் பங்கேற்க முடியும் என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.*
*நுழைவு வாரியத்தால் உறுதிசெய்யப்பட்ட ஆரோவில்வாசிகள் என அறிவிக்கப்பட்டவர்கள், ஆரோவில் பவுண்டேஷன் செயலர் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் குடியிருப்பாளர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டவர்கள் அனைத்து சமூக முடிவெடுக்கும் செயல்முறைகளிலும் பங்கேற்க தகுதியுடையவர்கள் ஆவர். இதில் 18 வயதுக்குட்பட்டவர்கள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள், பிற ஆரோவில் அந்தஸ்து பெற்றவர்கள் இதில் சேர்க்கப்படவில்லை".*

செயற்குழு ஏகமனதாக கையொப்பமிட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்த உரையானது *"'ஆரோவில்வாசி' என்று ஏற்றுக்கொள்ளப்படுபவர்களின் இறுதி முடிவு ஆரோவில்வாசிகள் அவையிடம் (ரெசிடென்ஸ் அசெம்பிளி) இருக்கவேண்டும், ஆரோவில் பவுண்டேஷன் செயலரிடம் அல்ல. எனவே, நாங்கள் ஆரோவில்வாசிகள் அவைச் சேவைக்கு (ஆர்ஏஎஸ்) இவ்வாறு எழுதியுள்ளோம்: நுழைவு வாரியத்தால் உறுதிப்படுத்தப்பட்ட ஆரோவில்வாசி என அறிவிக்கப்பட்டவர்கள், ஆரோவில் பவுண்டேஷன் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் குடியிருப்பாளர்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவுடன், அனைத்து சமூக முடிவெடுக்கும் செயல்முறைகளிலும் பங்கேற்க தகுதியுடையவர்கள் ஆவர்..."* (**https://auroville.org.in/article/84308 /** உறுதிப்படுத்தப்பட்ட ஆரோவில்வாசி நிலையைப் பற்றி. தேதி. 05.04.2021).

**ஆரோவில்வாசிகள் அவையின் (ரெசிடென்ஸ் அசெம்பிளி) முடிவு**




**92% (798) ஆரோவில்வாசிகள் மேற்கண்ட பரிந்துரைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.**
**8% (66) ஆரோவில்வாசிகள் அதை நிராகரித்தனர், மேலும் அவர்களின் வாக்குகள் "எந்த உறுப்பினரையும் நீக்கக்கூடாது"** எனக் கணக்கிடப்பட்டது.

*"...50%க்கும் அதிகமான வாக்காளர்கள் ஒரு உறுப்பினர் நீக்கப்படுவதை ஒப்புக்கொண்டால், அந்த உறுப்பினரின் பதவிக்காலம் உடனடியாக முடிவடைகிறது"* என்று பரிந்துரை கூறுகிறது, ஆரோவில்வாசிகள் அவையால் அங்கீகரிக்கப்பட்ட செயற்குழு அமைப்பு பற்றிய விவரங்களை கீழே பார்க்கவும். :




**அனு:** 782 வாக்குகள் - அனு நீக்கப்பட வேண்டும்; 82 வாக்குகள் - அனு தொடரவேண்டும்.

**அருண்:** 762 வாக்குகள் - அருண் நீக்கப்பட வேண்டும்; 102 வாக்குகள் - அருண் தொடரவேண்டும்.

**சாலி:** 52 வாக்குகள் - சாலி நீக்கப்பட வேண்டும்; 812 வாக்குகள் - சாலி தொடரவேண்டும்.

**ஹேமந்த்:** 55 வாக்குகள் - ஹேமந்த் நீக்கப்பட வேண்டும்; 809 வாக்குகள் - ஹேமந்த் தொடரவேண்டும்.

**பார்த்தசாரதி**: 710 வாக்குகள் - பார்த்தசாரதி நீக்கப்பட வேண்டும்; 154 வாக்குகள் - பார்த்தசாரதி தொடரவேண்டும்.

**சவ்ரோ:** 37 வாக்குகள் - சவ்ரோ நீக்கப்பட வேண்டும்; 827 வாக்குகள் - சவ்ரோ தொடரவேண்டும்.

**ஸ்ரீமாயி:** 779 வாக்குகள் - ஸ்ரீமாயி நீக்கப்பட வேண்டும்; 85 வாக்குகள் - ஸ்ரீமாயி தொடரவேண்டும்.

இப்பரிந்துரையில் கூறப்பட்டுள்ளபடி: "செயற்குழுவில் மீதமுள்ள உறுப்பினர்கள் பதவியில் தொடர்வார்கள் மற்றும் இடைக்கால உறுப்பினர்களை நியமிக்க தேர்வு செய்யலாம். அவர்கள் ஆரோவில் அவையுடன் கலந்தாலோசித்து மட்டுமே தேர்வு செய்ய முடியும்.
இந்த இடைக்கால உறுப்பினர்களை முந்தைய செயற்குழு உறுப்பினர்களிடம் இருந்து மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும். இடைக்கால செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் அடுத்த ஆர்ஏ-அங்கீகரிக்கப்பட்ட தேர்வு செயல்முறை நடைபெற்று, புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை இருக்கும்".

ஆர்ஏடி கொள்கையின்படி, "8. இந்த ஆர்ஏடி செயல்முறையின் மூலம் எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்துவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட பணிக்குழு/கள் அல்லது குடியிருப்பாளர்களிடம் உள்ளது".

இந்த முடிவெடுக்கும் நிகழ்வில் பங்கேற்ற அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் மிக்க நன்றி!

~ நன்றியுடன், *ஆரோவில்வாசிகள் அவை சேவைக்காக (ஆர்ஏஎஸ்) - டான், ஜியோவானி P., சதீஷ் A., டாட்டியானா S.*

<u>**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள்**</u>

**மனச்சாட்சியுடனும், நல்லெண்ணத்துடனும், ஒழுங்காகவும், கலைநய உணர்வுடனும் வேலை செய்யும் எல்லோருக்கும், கற்றுக்கொள்ளவும் முன்னேறவும் விரும்பும் எல்லோருக்கும் ஆசீர்வாதம்.**

**வேலையை முழு உள்ளத்துடனும் உன்னால் முடிந்த அளவு நன்றாகவும் செய், என்னுடைய உதவியும் ஆசீர்வாதமும் உனக்கு எப்போதும் இருக்கும்.**